ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை'என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிமுக நிலையிலேயே எதிர்க்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11–35

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்